ஜம்போரி சேவைக் குழுவில் (JST) உறுப்பினர்களாக பணியாற்ற விரும்பும் ஜனாதிபதி சாரணர்கள், திரிசாரணர்கள் மற்றும் வயது வந்த தலைவர்கள் தத்தமது மாவட்ட ஆணையாளர்கள் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

- வயது வந்த தலைவர்கள், தேசிய சாரணர் தலைமையகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆணைப்பத்திரம் அல்லது தேசிய பயிற்சி பிரிவில் வழங்கப்பட்ட கடமை வழங்கும் அதிகாரக் கடிதம்,பணி நியமனக் கடிதத்தை வைத்திருத்தல் வேண்டும்.
- **வயதெல்லை** :- 2027 ஜனவரி 17ம் திகதிக்கு 18 வயதை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- **தகைமை**:- விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்டு அங்கிகரிக்கப்படல் வேண்டும்.
- **பதிவுக் கட்டணம்** :- ரூபா 2500.00
- பதிவுக்கட்டணத்தில் பெறும் நன்மைகள்:- அதிகாரப்பூர்வ ஜம்போரி குழு சீருடை, சேவையின் போது உணவு,ஜம்போரி இளைஞர் முகாமில் தங்குமிடம், பங்கேற்பச் சான்றிதழ், ஜம்போரி சின்னம் என்பன.
- **கட்டணம் செலுத்தும் முறை** :- அறிவுறுத்தல்களின் படி பதிவை நிறைவு செய்து, பொருந்தக் கூடிய கட்டணத்தை செலுத்தவும்.
- மேற்கண்ட தகவல்களை கொண்டுள்ளவர்கள் இந்த ஜம்போது சேவைக் குழுவில் (JST) பதிவு செய்துக் கொள்ளலாம்.

பதிவுக்கான வழிமுறைகள்

பதிவினை மேற்கொள்வதற்கு முன்னர் பின்வரும் வழிமுறைகளை கவனமாகப் படிக்கவும்.

பதிவு செய்தல் :-

(பதிவிறக்கம் இணைப்பு) இருந்து துளுவு விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளரின் பரிந்துரை மற்றும் ஒப்புதலுடன் அதனை பூர்த்தி செய்யவும்

ஜம்போரி பதிவுக் கட்டணம்.:-

விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை 2026 செப்டெம்பர் மாதம் 30ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் தேசிய சாரணர் தலைமையக கணக்கில் வைப்பிலிடவும்.

தேசிய தலைமையகத்திற்கு பதிவுகளை சமர்ப்பித்தல்:-

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை, பதிவு கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டுடன் 2026 செப்டெம்பர் மாதம் 30ம் திகதிக்கோ,அதற்க முன்னரோ மின்னஞ்சல் வாயிலாக தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஜம்போரி சேவைக் குழு உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் செயல் பாட்டுத் தேவைகள் தொடர்பாக மீளாய்வு செய்ததன் பின்னர், 2026 ஒக்டோபர் மாதம் மூன்றாம் வாரத்திற்குள் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுவார்கள்.

ஜம்போரியின் போது தீங்கிலிருந்து பாதுகாப்பு (Safe from Harm)

11வது தேசிய சாரண் ஜம்போர முழுவதும் சகல பங்கேற்பாளர்களுக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் இலங்கை சாரணர் சங்கம் உறுதியாக உள்ளது.

இலங்கை சாரணர் சங்கத்தின் தீங்கிலிருந்து பாதுகாப்பு கொள்கையின் (Safe from Harm) படி 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சகல பங்கேற்பாளர்களும், தலைவர்களும் ஜம்போரிக்கு முன்னர் தீங்கிலிருந்து பாதுகாப்பு (Safe from Harm) இணைவழிப் பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்வது கட்டாயமாகும். (**www.scout.edu.lk**)